வாடகை வீட்டில் வாழ்ந்த
வரலாற்று நாயகர்
காமராசர்

செ.திவான்

வாடகை வீட்டில் வாழ்ந்த
வரலாற்று நாயகர் காமராஜர்

வரலாற்றாசிரியர்
செ. திவான் எம்.ஏ., எம்.ஃபில்.,

சுகைனா பதிப்பகம்,
106-F/4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002
திருநெல்வேலி மாவட்டம்.
✆ 0462 - 2572665

ஆசிரியரின் 83–ஆவது நூல்

முதற் பதிப்பு	:	18.07.2011
கணினி வடிவமைப்பு	:	நான்சி கணினியகம், பாளையங்கோட்டை.
அச்சிட்டோர்	:	சிவசக்தி அச்சகம், சிவகாசி.
முகப்போவியம்	:	முருகன், காசி கிராபிக்ஸ், பாளையங்கோட்டை
விலை	:	ரூபாய் இருபது

காணிக்கை



உலகில் ஊழலற்ற அரசும்,

உன்னத நிர்வாகமும் அமைந்திட

உண்மையாகவே உழைத்திடும்

உத்தமர்களுக்கு காணிக்கை.

செ.திவான்

எண்ண அலைகள்

01.06.2011 நள்ளிரவில் தூக்கத்தில் புரளும்போது, எள்ளின் மூக்கின் முனையளவுகூட திரும்ப முடியாதபடி தலைச்சுற்றல். மனதுக்குள்ளே அலறல்; வாழ்க்கை படுக்கையிலே முடிந்து விடுமோ என்ற எண்ணம். 02.06.2011 அதிகாலை 5 மணிக்கு மருத்துவர் டாக்டர் ம. முஹமது ரபி வந்து சிகிச்சை தந்தார்; எனது துணைவியார் டாக்டர் திவானி ஜஹானராவும் எனது மைத்துனர் டாக்டர் S.M.A.Q. ஜெய்லானியும், ஆசிரியர் பாதுஷாவும், எனது மருமகன் பைசல், உதவியுடன் காலைக் கடன்களைக் கழித்துவிட்டு, அசையாமல் படுக்கையில் இருந்தேன். 'விதியே விதியே என் செய நினைத்தாய்?' என்ற பாரதியின் பாடல் வரிகள் மனதில் அசை போட்டது.

03.06.2011 இரவு 9 மணிக்கு நியூ செஞ்சுரி நண்பர் முருகேசன் வந்தார்; என்னைக் கண்டதும் நெகிழ்ந்தார்; சும்மா எழுந்திருங்க. நான் பின்னாலே தாங்கிக் கொள்கிறேன் என்று அலக்காகத் தூக்கினார்; கொஞ்சம் நம்பிக்கை பிறந்தது.

தமிழர் தலைவர் வைகோ

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் கண்ணியத்திற்குரிய அண்ணாச்சி வைகோ. அவர்கள் உத்திரவினை ஏற்று, பாளையங்கோட்டை வெங்கடேஸ்வரா மருத்துவமனையில் பல நாள்கள் வாசம்; நரம்பியல் நிபுணர் டாக்டர் வி.ஸ்ரீராமகிருஷ்ணன், M.D., D.M., (Neuro) அரிய முயற்சிகள் எடுத்து அற்புதமாக சிகிச்சை தந்தார். மெல்ல மெல்ல முன்னேறி வருகிறேன். மருத்துவர்கள் திரு. தாமோதரன், M.B.B.S., திரு. G. லெட்சுமியா, M.B.B.S., காது, மூக்கு, தொண்டை நிபுணர் Dr. சுரேஷ் குமார், டாக்டர் திரு. மகாகிருஷ்ணன், டாக்டர் திரு. மனோகரன், திரு. S. சுப்பராயலு, ப. கல்லத்தியான், பாடகர் G.S. அபுபக்கர், ஆசிரியர் S. சாகுல் ஹமீது, புவியரசி ஷேக், மஜித் எனது மருமகன் டாக்டர்

M. அப்துல் மஜீத், மகள் தி.நஜாத், தி.சுகைனா, மருந்தாளுநர் வி. செயசிங், பொறியாளர் மு. பாக்கியசாமி, திருக்குறள் இரா. முருகன், கா.சுப்பிரமணியன், திருக்குறள் பிரபா - கிருட்டிணன், வை.இராமசாமி, தம்பி ஜெ.பிரின்ஸ் போன்றவர்களின் கனிவான உபதேசங்கள் தொடர்கிறது.

டாக்டர் வி. ஸ்ரீராமகிருஷ்ணன்

நரம்பியல் நிபுணர் டாக்டர் வி.ஸ்ரீராமகிருஷ்ணன் நம்பிக்கையுடன் எளியேனுக்கு சிகிச்சை அளிக்கிறார். எப்படியும் முன்னர் போல ஆகிவிடலாம். எல்லாம் வல்ல அல்லாஹ் அருள்புரிவான்; கருணை மழை சொரிவான் என்று நம்பிக்கையோடு மாதங்கள் கடந்து வருகின்றன.

டாக்டர் அ.நரசிம்மன்

இந்த நிலையில் கர்ம வீரர் காமராஜர் குறித்த பேராசிரியர் அ.நரசிம்மன், M.A., Ph.D. அவர்களின் ஆய்வேட்டை வாங்கிப் படிக்கும் பாக்கியம் கிடைத்தது. வாடகை வீட்டிலேயே வாழ்ந்து மறைந்தவர் தமிழக முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராஜர் என்றும், இறக்கும் வேளையில் அவரது இல்லத்தில் வெறும் நூறு ரூபாயும் சில்லறைகளுமே இருந்தது என்பதனை அறிந்த போது இது குறித்த விவரங்களை இளைய தலைமுறையினர் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலில், தலைச்சுற்றல் நோயோடு போராடும் வேளையிலும் நம்மால் எழுத முடிகிறதா என்று எனக்கு நானே சோதனை செய்தேன். எழுதினேன். அதுதான் இப்போது சிறு நூலாக உங்கள் கரங்களில் தவழ்கிறது.

நூலினை சிறந்த முறையில் கணினியாக்கம் செய்து தந்த நான்சி கணினியகத்திற்கும், நூலினை நல்ல முறையில் அச்சிட்ட சிவசக்தி ஆர்ட்ஸ் திரு.கு.குமரேசன் ஆகியோருக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

18.07.2011

பாளையங்கோட்டை

செ. திவான்,

106F/4A திருவனந்தபுரம் சாலை,

பாளையங்கோட்டை – 627 002

திருநெல்வேலி மாவட்டம்.

✆ 0462 - 2572665

வாடகை வீட்டில் வாழ்ந்த வரலாற்று நாயகர் காமராசர்

பொன்னில்லான், பொருளில்லான்,
புகழின்றி வசையில்லான்
இல்லாளும் இல்லான்,
இல்லையென்னும் ஏக்கமில்லான்,

என்று கவியரசர் கண்ணதாசனால் பாராட்டப் பெற்ற பெருந்தலைவர் காமராசர், 1903, ஜூலை 15-இல் குமாரசாமி - சிவகாமியம்மாள் தம்பதியரின் தவப்புதல்வராகத் தோன்றினார். பாட்டி பார்வதியம்மாள் சூட்டிய பெயர் காமாட்சி.

அன்னை சிவகாமி தன் செல்ல மகனை 'ராஜா' என்று அழைத்தல்; தந்தை குமாரசாமியோ தன் குழந்தைக்கு தெய்வத்தின் பெயரும் செல்லப் பெயரும் இருக்க வேண்டுமென்று விரும்பினார்; 'காமாட்சி ராஜா' என்ற இரு பெயர்களும் நாளடைவில் 'காமராஜ்' ஆயிற்று. 1908-இல் பள்ளியில் சேர்ந்தார்; அடுத்த ஆண்டில் 1909-இல் தேங்காய்மண்டியில் சுறுசுறுப்பாக வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டிருந்த தந்தை குமாரசாமி காலமானார்.

காமராஜரின் தாய்வழிப் பாட்டனாரான சுலோசன நாடார் ஊர் நாட்டாண்மைக்காரர்; முத்துராம்பட்டியின் கிராம முன்சீப். சுலோசன நாடாரின் மூத்தமகன் கருப்பையா நாடார். விருதுநகரில் ஜவுளிக்கடை நடத்தி வந்தார். சுலோசன நாடாரின் இளையமகன் நாராயணநாடார் திருவனந்தபுரத்தில் மரக்கடை வைத்திருந்தார்.

கி.பி: 1914-இல் காமராசர் ஆறாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். பள்ளிப் படிப்பை குடும்பச் சூழ்நிலையில் நிறுத்த வேண்டியதாயிற்று.

ஜவுளிக் கடையிலிருந்து – சென்னைக்கு . . .

*கருப்பையா நாடார் ஜவுளிக் கடையில் காமராஜர் வேலை செய்தார். (1915) திருவனந்தபுரத்தில் மரக்கடையில் கொஞ்ச காலம் காமராசர் வேலை செய்தார்.** ஜவுளிக்கடையில் பணியாற்றியபோது மாமா கருப்பையா நாடாருடன் காமராசர் முதன் முதலாக சென்னைக்கு வந்தார்.*

இரண்டாவது விஜயம்

*விருதுநகரில் தேயிலைத் தூள் வியாபாரம் செய்து வந்தவர் சண்முகம். காமராசர் மீது பேரன்பு கொண்டவர். வேல்ஸ் இளவரசர் வருகையின் போது சென்னைப் பட்டினத்தில் காங்கிரசாரின் பகிஷ்கரிப்பு இயக்கம் எவ்வாறு நடைபெறுகிறது என்பதைக் காண விரும்பிய காமராசரும், சண்முகமும் சென்னை வந்தனர். இது காமராசரின் இரண்டாவது முறை சென்னை பயணம் ஆகும்.*** இந்தப் பயணத்தின் போது சென்னை மாநகரம் முழுவதையும் காமராசர் சுற்றிப் பார்த்துவிட்டார்.*

தமிழ்நாடு காங்கிரஸ் செயலாளர் – அகில இந்திய காங்கிரஸ் தலைவர்

*காங்கிரசில் சாதாரண உறுப்பினராகப் பணியாற்றி தனது உழைப்பால், தியாகத்தால் மெல்ல மெல்ல வளர்ந்து வந்தார் காமராஜர். 1936-இல் காரைக்குடியில் நடந்த தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தலில் சத்தியமூர்த்தி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.**** சத்தியமூர்த்தி காமராசரை காங்கிரஸ் செயலாளராக நியமித்தார்.***** அதன் பின்னர் காமராசர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி*

---

* டாக்டர். அ.நரசிம்மன், காமராஜரும் இந்திய தேசியக் காங்கிரசும், பிஎச்டி. ஆய்வேடு, 1994, ப. 30.

** சிவலை இளமதி, சரித்திர நாயகன் காமராஜர், 2002, ப. 120.

*** தி ஹிந்து, 26.01.1936.

**** Eugene F,Irschick, Tamil Revivalism in the 1930's Madras, 1986, p. 247.

உறுப்பினராகவும் ஆனார். 1940 பிப்ரவரி 15, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1954 வரை (இடையில் இரண்டு ஆண்டுகள் தவிர) அப்பதவியில் இருந்தார். 1945-இல் அகில இந்திய காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு உறுப்பினரானார்; 1949-இல் அகில இந்தியக் காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினரானார். 1963 அக்டோபரில் அகில இந்திய காங்கிரஸ் தலைவராகி 1967 வரை அப்பதவியில் இருந்தவர் காமராசர்.

அரசுப்பதவிகள்

1937-இல் சாத்தூர் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்.

1941-இல் விருதுநகர் நகரசபை உறுப்பினர்.

1942-இல் விருதுநகர் நகர்மன்றத் தலைவர்;

1946-இல் இந்திய அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்;

1952-இல் ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்;

ஏப்ரல் 13

1954-இல் தமிழக முதலமைச்சரானார்; அதே ஆண்டில் குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினரானார்; 1957-இல் சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர்; இரண்டாவது முறையாகவும் முதலமைச்சர்.

1962-இல் மீண்டும் சாத்தூர் சட்டமன்ற உறப்பினராக; மூன்றாவது முறையாகத் தமிழக முதல்வரானார் காமராசர்.

1969-இல் நாகர்கோவில் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர்;

1971-இல் மீண்டும் நாகர்கோவில் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர். 1975 அக்டோபர் 2-இல் இவ்வுலக வாழ்வை நீத்த போதும் நாடாளுமன்ற உறுப்பினர் காமராசர். அகில இந்தியத் தலைவராக, காங்கிரஸ் பேரியக்கத்திலும், அரசுப்

பதவிகளிலும், மூன்று முறை தமிழகத்தின் முதலமைச்சராகவும் மக்கள் பணியாற்றிய பெருந்தலைவர் காமராசர் சென்னையில் சாகும் வரை வாடகை வீட்டிலேயே வாழ்ந்து மறைந்தார் என்பது வரலாற்று உண்மை. இன்றைய இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ள வேண்டிய அதியச் செய்தி; அதனால் அவர் குடியிருந்த வீட்டின் வரலாறு விரிவாக இதோ . . .

நரசிங்கபுரம்

சென்னையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அலுவலகம் அண்ணாசாலை நரசிங்கபுரம் தெருவில் இயங்கி வந்தது. அந்த இடத்தில் தான் காமராசர் முதலில் தங்கியிருந்தார். அங்கே கொசுக்கடி அதிகம். கொசுக்கடியினால் காமராசருக்கு மலேரியா காய்ச்சல் வந்தது. டாக்டரிடம் சென்றார்; சிகிச்சை பெற்றார். குணமானார்; சிகிச்சை அளித்த மருத்துவர் காமராசரிடம் ‘இனிமேல் இந்த இடத்தில் தங்காதீர்கள்; உடம்புக்கு ஆகாது; வேறு சுகாதாரமான இடமாய்ப் பார்த்துத் தங்குங்கள்’ என்றார். காமராசரோ மருத்துவரின் யோசனையை ‘சட்டை’ செய்யவில்லை. தொடர்ந்து நரசிங்கபுரத்திலிருந்த காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்திலேயே தங்கியிருந்தார்.

மறுமுறையும் மலேரியா காய்ச்சல்

திரும்பவும் மலேரியா காய்ச்சல் காமராசரைத் தாக்கியது. மறுமுறையும் மருத்துவரிடம் சென்றார்; முன்னர் சொன்ன அறிவுரையை மீண்டும் சொன்னார் மருத்துவர். நோய் குணமானது; சென்னையில் வேறு எங்கே தங்குவது? என்ற நிலை அப்போது . . .

பட்டிவீரன்பட்டி சௌந்திர பாண்டியனார்

உழைப்பால் உயர்ந்த, பண்பாடுமிக்க, நீதிக்கட்சியின் தலைவர்களில் ஒருவர் அச்சம் அகற்றிய அண்ணல் பட்டிவீரன்பட்டி சௌந்திர பாண்டியனார். ஊத்தாம்பட்டிக் கூட்டத்தைச் சார்ந்த, புன்னைவனம் நாடாரின் புதல்வர் அருணாசல நாடார்; அவரின் புதல்வர் அய்யநாடார் -

திருமதி.அ.சின்னம்மாளின் மகனாகப் பிறந்தவர் ஊ.பு.அ. சௌந்திரபாண்டியனார்; அவரோடு உடன்பிறந்தோர் நால்வர். பெரியநாயகி அம்மாள், இராசலெட்சுமியம்மாள், ரெங்கசாமி, இராஜேஸ்வரி அம்மாள் ஆகியோர். சௌந்திர பாண்டியனாரின் பிள்ளைகள் தீனதயாளன், விஜயாம்பிகை, இராசசேகரன் என்ற போஸ், பாஸ்கரன், கிருஷ்ணமூர்த்தி.*

நடராசன்

சமூகநீதிக் காவலர் சௌந்திர பாண்டியனாரின் சகோதரியின் மகன் நடராஜன். விருதுநகர்க்காரர். பெரிய செல்வந்தர்; காங்கிரஸ்காரர். நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர். தமிழ்நாடு போலீஸ் ஐ.ஜி.யாக இருந்த திரு எப்.வி.அருளின் மாமனார் ஏ.வி.தாமஸ். இவர்கள் இருவரும் சேர்ந்து கோவில்பட்டியில் 'லாயல் ஆலை'யை நடத்தி வந்தனர். நடராஜனின் வீடு கோவில்பட்டியில் இருந்தது. நடராஜன் குடும்பத்தினர் சென்னைக்கு வருவார்கள்; நடராஜனும் அடிக்கடி சொந்த வேலையாக சென்னைக்கு வருவார். சென்னையில் ஓட்டலில் அறை எடுத்துத் தங்குவதற்கு அவருக்குப் பிடிக்கவில்லை. எனவே தியாகராயநகர் திருமலைப்பிள்ளை சாலையிலுள்ள எட்டாம் எண் வீட்டுக்கு வாடகைக்கு வந்தார்.

கோவிந்தராஜுலு

ஆந்திராவைச் சேர்ந்த கோவிந்தராஜுலு என்பவருக்குச் சொந்தமான அந்த வீட்டை மாதம் 90 ரூபாய்க்கு வாடகைக்குப் பிடித்தார் நடராஜன். அவர் சென்னைக்கு வந்து செல்லும் நாட்கள் தவிர இதர காலங்களில் வீடு காலியாகவே இருக்கும்.

தியாகச்சுடர் காமராசர் மீது நடராஜனுக்கு ஏகபக்தி. காமராசர் கட்சி அலுவலகத்தில் தங்கி சிரமப்படுவதை அறிந்ததும், தனது வாடகை வீட்டில் காமராசரைத் தங்க வைத்திட முடிவு செய்தார்.

---

* அச்சம் அகற்றிய அண்ணல், 1977, பக். 2 – 5.

வைரவன்

ஆனால் பெருந்தலைவர் காமராசர் உடனடியாகச் சம்மதிக்கவில்லை. தொடர்ந்து வற்புறுத்தினார் நடராஜன்; காமராசரால் மறுக்க முடியவில்லை. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த காமராஜர் 1946-இல் அந்த வீட்டுக்குக் குடி போனார் என்று வைரவன் கூறுகிறார்.*

முருக – தனுஷ்கோடி

'காமராஜ் ஒரு சரித்திரம்' என்ற நூலில் அதன் ஆசிரியர் முருக - தனுஷ்கோடி 1948-ஆம் ஆண்டில் காமராஜர் திருமலைப்பிள்ளை ரோட்டில் உள்ள 8-ஆம் எண் இல்லத்தில் குடியேறினார் என்று தகவல் தந்துள்ளார்.**

சிவலை இளமதி

சரித்திர நாயகன் காமராஜர் என்ற நூலில் (2002) சிவலை இளமதி, பக்கம் 565-இல் 1946-இல் இந்த வீட்டுக்கு ஒரு விருந்தாளியாக வந்து குடியேறியவர் தான் காமராஜ் என்று குறிப்பிட்டுள்ளார்.

வீட்டின் மாடி முழுவதும் காமராஜருக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. நடராஜனும், அவரது குடும்பத்தாரும் சென்னைக்கு வந்தால் கீழ்த்தளத்தில் தங்கிக் கொள்வார்கள்.

எப்பொழுதும் கட்சிப் பணிகளின் நிமித்தமாகத் தமிழகமெங்கும் ஊர் ஊராகச் சுற்றுப் பயணம் செய்து கொண்டே இருந்த காமராஜர் இந்த வீட்டில் மாதத்தில் மூன்று நான்கு நாட்களே தங்கியிருந்தார்.

தமிழக முதலமைச்சர்

தமிழகக் காங்கிரஸ் சட்டப் பேரவை உறுப்பினர்கள் 31.03.1954-இல் கூடி பெருந்தலைவர் காமராஜரை முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்தார்கள். 'தந்தை செய்யும் தொழிலை மகன் செய்ய வேண்டும்' என்ற குலக் கல்வித்

---

* காமராசருடன் கால் நூற்றாண்டு, 2009, ப. 164.

** காமராஜர் ஒரு சரித்திரம், 1982, ப. 165.

திட்டத்தைக் கொண்டு வந்த ராஜாஜி பதவி விலகியதால், சி.சுப்பிரமணியத்தை எதிர்த்து களமிறங்கிய காமராசர் 93 வாக்குகள் பெற்று முதலமைச்சரானார். 41 வாக்குகள் பெற்ற சி.சுப்பிரமணியத்தையும், முந்தைய ராஜாஜி மந்திரி சபையில் இருந்த மேலும் 4 பேரையும் சேர்த்து, எட்டு பேர் கொண்ட சிறிய மந்திரி சபையை அமைத்து தமிழகத்தை வழி நடத்தியவர் காமராசர்.*

முதலமைச்சரின் வீடு

முதலமைச்சர் பதவிக்கென்று ஒரு கௌரவம் இருக்கிறது. அவர் வீடும் அந்தஸ்து மிக்கதாக இருக்க வேண்டும். பல பெரிய மனிதர்கள், வெளிநாட்டுக்காரர்களெல்லாம் உங்களைப் பார்க்க வருவார்கள். புதிய வீட்டில் கார்கள் நிறுத்துவதற்கும் நிறைய இடமிருக்கிறது. நீங்கள் அங்குதான் குடியேற வேண்டும் என்று வாதாடினார்கள் காங்கிரஸ் தலைவர்கள்.

காமராஜருக்குக்கென்று அரசாங்கம் கொடுக்கும் வீட்டில் போய்க் குடியேற வேண்டும் என்று நண்பர்கள் அனைவரும் வற்புறுத்தினர். முதலமைச்சர் குடியேறுவதற்காகப் பெரிய பங்களா ஒன்றைப் புதுப்பித்து வேலை பார்த்து தயார் செய்து விட்டனர் அதிகாரிகள்.

வழக்கம் இருக்கிறதா?

'முதலமைச்சர்கள் கட்டாயம் அரசாங்க வீட்டில் தான் குடியிருக்க வேண்டுமா? முன்னாள் முதலமைச்சர்கள் ராஜாஜி அவரது சொந்த வீட்டில் தானே குடியிருந்தார். அதில் ஏதேனும் வழக்கம், நடைமுறை இருக்கிறதா?' என்று ஆலோசனை கேட்டார் காமராஜர்.

தீர்க்கமான முடிவு

'அட . . . அரசாங்க வீடெல்லாம் வேண்டாம்னேன். எப்பவும் இருக்கிற வீட்லயே இருந்திட்டுப் போயிடுவோம். பெரிய

* Madras Legislative Assembly Debates, Vol. XVI, May 1954, p.4.

மனுஷங்க வர்ரதா இருந்தா கோட்டையிலே வந்து பாத்துக்கட்டும். நம்ம எப்பவும் பாக்கப் போறவன் சாதாரண மனுசந்தான். அவன் மாநிலத்துல பல மூலை, முடுக்குலேயிருந்து கௌம்பி வருவான். எக்மோரில் வந்து எறங்கி, காமராஜ் நாடார் வீடு எங்கே இருக்குன்னு கேட்டா, டக்குன்னு எல்லாரும் சொல்ற மாதிரி இருக்கணும், 9-ஆம் நம்வர், 10-ஆம் நம்பர் டவுண் பஸ்ஸிலே ஏறினா நேரா நம்ம வீட்டு வாசல்லே வந்து எறங்கிடுவான். நாலணா செலவோடு முடிஞ்சி போயிடும் . . . அடையாறுல, கிரீன்வேஸ் ரோட்லயெல்லாம் போய் ஒக்காந்துக்கிட்டோம்னா ஏழை, பாழைங்க எப்படி வந்து நம்ம பாக்க முடியும்? ஆட்டோவுக்கு. டாக்ஸிக்குக் கொடுக்கவெல்லாம் அதுங்க எங்க போகும்? வசதியானவங்க பங்களாவிலேயெல்லாம் போயி இருந்துகிட்டா, சாதாரண ஜனங்க வர சங்கடப்படுவாங்க. அரசாங்க வீட்ட வேற நல்ல காரியத்துக்கும் பயன்படுத்திக்கலாம். இந்தப் பதவி நமக்கு நெரந்தரமா என்ன? நம்ம விலாசம் எப்பவும் திருமலைப்பிள்ளை ரோடாவே இருக்கட்டும்' என்று தீர்க்கமாக தனது முடிவை அறிவித்தார் காமராசர்.

சாமான்யர்களைப் பற்றிய சிந்தனை

காமராஜர் எடுக்கிற எந்த முடிவும் பாமர மக்களை மையமாக வைத்துத்தான் எடுக்கப்படும். 'சாதாரண ஜனங்கள் இதனால் பாதிக்கப்படுவாங்களா? இல்ல, பயனடைவாங்களான்னு தான் யோசிப்பார். சராசரி மனுஷனை விட்டுப் பிரிஞ்சி அன்னியமாயிடாம இருக்கிறதில் காமராஜர் மிகவும் கவனமாயிருந்தார். அவர் நினைத்திருந்தால் பங்களா மாதிரி அரசாங்க வீட்டில் ஒன்பது வருஷங்கள் குடியிருந்திருக்கலாம். ஆனால் வாழ்நாள் முழுக்க வாடகை வீட்டிலேயே காலத்தை முடித்துவிட்டார்' என்பர் பெருந்தலைவரின் உதவியாளர் திரு. வைரவன்.*

---

* வீரபாண்டியன், ஆகட்டும் பார்க்கலாம், 2005, பக். 82 – 83.

காமராஜர் குடியிருந்த திருமலைப்பிள்ளை சாலை வீட்டிலேயே தொடர்ந்து தங்குவதென்று முடிவு செய்தார் காமராஜர். வசதியான பங்களாவை மறுத்துவிட்டு, வழமையான வாடகை வீட்டிலேயே வாழ்நாள் முழுவதும் வசித்தார் காமராஜர்.

வாடகை 250 ரூபாய்

90 ரூபாயாக இருந்த வீட்டின் வாடகை மெல்ல மெல்ல ரூபாய் 160 ஆனது. வீட்டின் உரிமையாளரோ இது மிகவும் குறைந்த வாடகை. மாத வாடகை ரூபாய் 800 தர வேண்டுமென்று கேட்டார். ஏனென்றால் 9 நெம்பர் திருமலைப்பிள்ளை ரோடு வீட்டின் வாடகை 800 ரூபாய். எனவே எட்டாம் நம்பர் வீட்டிற்கும் அந்த வாடகையைக் கேட்டார் வீட்டுக்காரரர். காமராஜரைப் பொறுத்தவரை பெரியதொகை அவரால் கொடுக்க முடியாது. அதனால் சங்கடத்துடன் யோசித்தார். வீட்டுக்காரரிடம் 'என்னால் முடியாது' என்று சொல்லவும் விரும்பவில்லை.

1960–களில்

26.10.1960-இல் முதலமைச்சர் காமராஜர் அப்போது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் என். சஞ்சீவ ரெட்டிக்கு எழுதிய கடிதத்தில் தனது வரவு செலவு பற்றிய விவரத்தைத் தந்துள்ளார். அதில் தங்களது சர்க்குலர் P.G. 2/4/12567, 17.06.1960 தேதியிட்ட கடிதப்படி எனது வருவாய் விவரங்களைத் தெரிவித்துள்ளேன். முதலமைச்சரின் சம்பளம் மாதம் ரூபாய் 1500. 12 மாதங்களுக்கான மொத்த வருவாய் ரூ.18,000/- மாத வீட்டுச் செலவு ரூபாய் 700. கார் பராமரிப்புச் செலவு ரூ. 450, பயணத்தின் போது ஏற்படுகிற செலவு ரூ.200. ஆக மாதம் ரூபாய் 1350 செலவாகிறது என்று எழுதியுள்ளார்.*

---

* Kamaraj to N.Sanjeevi Reddy, 26, October 1960, Kamaraj Papers Kamaraj Memorial House, Madras.

முதலமைச்சரின் வீட்டு வாடகைப்படி

மாநில முதலமைச்சருக்கு வீட்டு வாடகைப்படியாக ரூபாய் 250 பெறலாம். அதையாவது எனக்கு மாதந்தோறும் வாங்கிக் கொடுங்கள் என்றார் வீட்டின் உரிமையாளர் கோவிந்தராஜுலு. அப்படியா? என்று சிரித்தார் காமராஜர். அதுவரை முதலமைச்சர் வீட்டு வாடகைப் படியைப் பெறவில்லை. அதன் பின்னரே காமராஜரின் கட்டளைப்படி மாதம்தோறும் வீட்டு வாடகையாக ரூ.250 வாங்கிக் கொடுக்கப்பட்டது.

வீட்டை விற்க முடிவு

கோவிந்தராஜுலு அதிகம் செலவு செய்யக்கூடியவர் வரவுக்கு மிஞ்சி செலவளிப்பார். எனவே கடனில் மூழ்கினார். காமராஜ் குடியிருந்த வீட்டை விற்கப் போகிறேன் என்றார்.

அந்த வீட்டை வாங்கிவிடலாம் என்று நண்பர்கள் பலரும் வற்புறுத்தினர். **'எனக்கு எதுக்குப்பா வீடு'** *என்று மறுத்த காமராஜர், தன் உதவியாளர் வைரவனிடம்* **'நமக்கு எதுக்கு வீடுண்ணேன்; பேசாம இருண்ணேன்'** *என்று நறுக்கென முடித்துவிட்டார். தன் பெயரில் சொத்தோ எதுவுமோ இருக்கக்கூடாது என்று தீர்க்கமான முடிவில் இருந்தார் காமராஜர்.*

1962 – மணி விழா

பெருந்தலைவர் காமராசரின் மணிவிழாவை சென்னை நகர காங்கிரஸ் பிரமுகர்கள் ஏற்பாடு செய்தனர். மணிவிழா மலரும் தயாராயிற்று. மணிவிழாக் குழுவினர் சார்பில் காமராஜர் குடியிருந்த திருமலைப்பிள்ளை சாலை வீட்டை விலைக்கு வாங்கி காமராஜருக்குப் பிறந்த நாள் பரிசாக திருச்சி தாப்பா ரெட்டியார் வழங்க விரும்பினார். இதை அறிந்த முதலமைச்சர் காமராஜர் மிகுந்த ஆத்திரமடைந்தார். **'அதெல்லாம் வேண்டாம்னேன்'** *என்று திட்டமாக மறுத்துவிட்டார்.*

ஏலத்துக்கு வந்த வீடு

கோவிந்தராஜுலு தனது வீட்டின் பேரில் ஏகமாய் கடன் வாங்கிவிட்டார். கடனுக்கு வட்டி கட்ட முடியவில்லை. கடன் தொல்லையால் 1967-இல் காமராஜர் குடியிருந்த வீடு நீதிமன்ற உத்திரவுப்படி ஏலத்திற்கு வந்தது. 'அமீனா' வீட்டின் மீது நோட்டிஸ் ஒட்டினார்.

வீட்டை ஏலம் விட இருப்பதை அறிவித்திட 'தமுக்கு' (தண்டோரா) அடிக்க ஆள் வந்தார். காமராஜர் குடியிருக்கும் வீடு என்று தெரிந்து கொண்டார்; வீட்டின் முன்னே நின்று தண்டோரா போடாமல் அருகே நின்று 'தமுக்கு' அடித்துவிட்டுப் போனார்.

வீட்டைக் காலி செய்ய விருப்பம்

தான் குடியிருந்த வீட்டின் மீது ஏல நோட்டீஸ்கள் வருவதும், 'தண்டோரா' போடுவதும் காமராசருக்குப் பிடிக்கவில்லை. எனவே அந்த வீட்டைக் காலி செய்துவிட்டு வேறு வீட்டுக்குப் போய்விட நினைத்தார்.

தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானம்

1930-இல் லார்டு கோவிந்ததாஸ் என்பவரிடமிருந்து கிரவுண்டு ஒன்றுக்கு ரூ500 வீதம் ரூ5 ஆயிரத்திற்கு 10 கிரவுண்டு அளவுள்ள இடம் வாங்கப்பட்டது. இந்த இடத்தை காங்கிரசிற்கு வாங்கியவர்கள் எஸ்.சீனிவாச அய்யங்காரும், சி.என்.முத்துரங்க முதலியாரும்; இங்கு சுமாரான கட்டடம் முதலில் கட்டப்பட்டது. சில காலம் வெறும் தகரக் கொட்டகையாகவும் இருந்தது. தற்போதுள்ள சத்தியமூர்த்தி பவன் கட்டிடம் மூன்று மாடிகளும், பின்னால் உள்ள ஆடிட்டோரியமும் காமராஜால் 1962-இல் கட்டி முடிக்கப்பட்டது. அப்போது அதற்கான செலவு ஐந்து இலட்சத்தி ஐம்பதாயிரம் ரூபாய்.

சென்னை அண்ணாசாலையில் உள்ள தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானம் 'பிளாக்கர்ஸ் கார்டன்' என்று முதலில்

அழைக்கப்பட்டது. 1942-இல் 'வெள்ளையனே வெளியேறு இயக்கம்' தொடங்கியபோது, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த காமராஜர் கட்சிப் பணம் ரூ.65,000-த்தை தன்னிடமிருந்தால் போலீசார் பறிமுதல் செய்துவிடுவார்கள் என்று எண்ணி, இந்து நாளேட்டின் அன்றைய ஆசிரியரான கஸ்தூரி சீனிவாசனிடம் அந்தப் பணத்தை ஒப்படைத்து விட்டுச் சிறைக்குப் போனார். கஸ்தூரி சீனிவாசனும் காங்கிரஸ் கட்சிப் பணம் தம்மிடம் இருந்தால் போலீசாரால் பறிமுதல் செய்யப்பட்டுவிடும் என்று அஞ்சினார். அதனால் அன்றைய மவுண்ட்ரோடு (அண்ணா சாலை) தேனாம்பேட்டை பகுதியில் உள்ள பிளார்க்கர்ஸ் கார்டனில் உள்ள 187 மனைகளையும், அதன் அருகிலிருந்த 38 மனைகளையும் ரூபாய் 86 ஆயிரத்திற்கு விலைக்கு வாங்கினார். பெருந்தலைவர் காமராஜர் சிறையிலிருந்து விடுதலையானதும் 1945-இல் இந்த இடத்தை அவரிடம் ஒப்படைத்தார். அதுதான் தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானம்; இன்று 'காமராஜ் திடல்' என்று அழைக்கப்படுகிறது. இந்த மைதானமும், முன்புறமுள்ள கட்டிடங்களும் இன்று பல கோடி ரூபாய்கள் மதிப்புள்ளவை ஆகும். இந்த மைதானத்தில் காலியிடத்தில் சிறிய வீடு ஒன்று கட்டி போய் விடலாம் என்று காமராஜர் எண்ணினார். பிறகு அதையும் கைவிட்டார்.

சோழா ஓட்டல் அருகில்

*தற்போது சென்னையில் சோழ ஓட்டல் இருக்கும் இடத்திலிருந்து சற்று தூரத்தில் வாடகைக்கு வந்த வீட்டைப் பார்த்தார்கள். அந்த வீடும் காமராஜருக்குப் பிடிக்கவில்லை. நாடு நாடு என்று தம் வாழ்நாள் முழுக்க பாடுபட்ட தியாகச்சுடர் காமராஜருக்கு சென்னையில் குடியிருக்க ஒரு வீடு கிடைக்காமல் அவதிப்பட்டார் என்றால் நம்ப முடிகிறதா? அதிசயம். ஆனால் இதுதான் உண்மை என்பர் சிவலை இளமதி.**

---

* முற்கூறிய நூல், ப. 566.

தனக்காக இலட்சக்கணக்கில் பணம் போட்டு பெரிய பங்களாக்களை வாங்கிக் கொடுத்திட எத்தனையோ தொழிலதிபர்களும், செல்வந்தர்களும் தயாராக இருந்தும் தன் பெயரில் எந்த வீடும் வாங்கக் கூடாது என்று கண்டிப்புடன் இருந்தார் காமராஜர்.

எம்.பி. தாமோதரன்

காமராஜரின் நண்பர் எம்.பி. தாமோதரன். இவர் எப்படியாவது காமராஜரைச் சம்மதிக்க வைத்து சொந்த வீடு வாங்க வைத்து விடுவேன் என்று உறுதியாகக் கூறிக் கொண்டிருந்தார்.

இரண்டு லட்சத்துப் பத்தாயிரம்

காமராஜருக்கு வீடு வாங்கிக் கொடுக்கப் போகிறோம் என்று சிலர் நன்கொடை வசூலிக்கும் முயற்சியில் இருப்பதை அறிந்த காமராஜர் உடனே அவ்வாறு யாரிடமாவது தொகை பெற்றிருந்ததால் அதனை அவரவர்களிடம் திருப்பி ஒப்படைத்துவிடவும் உத்திரவிட்டார்.

ஒருநாள் காமராஜர் வீட்டின் மாடியிலிருந்து கீழே வரும் போது தாமோதரன் பார்த்தார். உங்களிடம் தனியாகப் பேச வேண்டியது இருக்கிறது என்றார். 'இப்ப தனியாதானே இருக்கேன்' என்றார் காமராஜர். 'இல்லை . . . அப்புறம் வருகிறேன்' என்றார் தாமோதரன். மாலையிலே வந்தார். காமராஜரைச் சந்தித்தார்.

நவசக்தி ஒரு லட்சம்

வீட்டிற்குத் தேவையான பணத்தை மாவட்ட காங்கிரஸ் கமிட்டிகளிலிருந்து பத்தாயிரம் ரூபாய் வீதம் வாங்கலாம் என்று கண்டிப்பாகக் கூறி, மற்றவர்களும் சம்மதித்த பிறகே வாடகை வீட்டை சொந்தமாக வாங்கிடச் சம்மதம் சொன்னார் காமராஜர். நவசக்தி சார்பில் தாமோதரன் ஒரு லட்ச ரூபாய் தந்தார். மீதித் தொகை ஒரு லட்சத்துப் பத்தாயிரத்தையும் கருப்பையா மூப்பனாரே தந்தார்.

கருப்பையா மூப்பனார் – பா. ராமச்சந்திரன்

பா.ராமச்சந்திரன், சேலம் ராமசாமி உடையார், ஜி.கருப்பையா மூப்பனார், முருக - தனுஷ்கோடி ஆகியோர் கொண்ட அறக்கட்டளை அமைக்கப்பட்டு வீட்டினை விலைக்கு வாங்கும் முயற்சி தொடர்ந்தது.

வைர வியாபாரி பாப்பலால்

கோவிந்தராஜுலுவின் மூத்த மனைவி இறந்து விட்டதால் இரண்டாவது திருமணம் செய்திருந்தார். அவருக்கு மூன்று மகன்கள், நான்கு மகள்கள். இரண்டாம் மனைவியுடன் வாழ்ந்த போதும் கோவிந்தராஜுலுவின் கஷ்டங்கள் தீரவில்லை. காமராஜர் குடியிருந்த வீட்டை வைர வியாபாரியான பாப்பலால் சேட்டிடம் அடகு வைத்திருந்தார். தன்னிடம் கடன் வாங்கி அதனைத் திருப்பித் தராத 1800 வழக்குகளில் இதுவும் ஒன்றாக இருந்தது. எனவே பாப்பலாலிடம் தாமோதரன் பேசினார். தொலைபேசியில் இருந்த பாப்பலாலை காமராஜரிடம் பேசச் சொன்னார். காமராஜருக்கும் பாப்பலாலை நன்றாகத் தெரியும். **'நான் காமராஜ் பேசுறேன். பாப்பலால் எப்படி இருக்கீங்க'** என்றார் தொலைபேசியில் காமராஜர். பாப்பலால் அதிர்ந்து போய் விட்டார். அவருக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை. தவித்தார். துடித்தார். 'தலைவரே . . . நீங்க குடியிருக்கிற வீடுன்னு எனக்குத் தெரியாது. போனில் நீங்கள் ஏன் பேசினீர்கள்? நானே நேரில் வாரேன்' என்று அழாத குறையாகச் சொன்னார். இக்கட்டான நிலையை உணர்ந்த காமராஜர் **'அதெல்லாம் வேண்டாம்'** என்று சொல்லிவிட்டு ரிசீவரை தாமோதரனிடம் நீட்டினார். 'அந்த வீட்டை ஒரு காசு போட்டுப் பத்திரம் போடுங்கள். நான் கையெழுத்துப் போட்டு விடுகிறேன்' என்றார் பாப்பலால். தாமோதரன் அதனை காமராசரிடம் தெரிவிக்க, **'ஒரு காசு என்றாலும் கணக்குப் பார்த்துக் கொடுத்து விடுங்கள்'** என்று திட்டவட்டமாகக் கூறினார் காமராசர்.*

---

* வைரவன், காமராஜருடன் கால் நூற்றாண்டு, ப. 172.

அடமானத் தொகையை உரிய வட்டியோடு செலுத்தினால் தான் இந்த வீட்டை வாங்க வேண்டும்; இல்லாவிட்டால் வீடு வாங்கும் முயற்சியையே கைவிட்டுவிட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார் காமராசர்.

சொந்த வீடு எதற்கு?

காமராஜர் வாழ்க்கைப் பாதை என்னும் தொடர் 'மாலை முரசு' இதழில் வெளிவந்தது. அதில் 49-வது அத்தியாயம் சொந்த வீடு எதற்கு? 19.01.1976 திங்கட்கிழமை வெளிவந்த மாலை முரசு தரும் தகவலின்படி,

நீங்க எங்கே தங்குவீங்க? '**இந்த வீட்டிலே கரண்டு போயிட்டா நம்ம அய்யர் வீட்டிலேதான் தங்குகிறேன். அவர் லாட்ஜிலே தங்கிக்க வேண்டியதுதான்**' என்றார் காமராஜர்.

'நீங்க எதைப் பற்றியும் நினைக்காதீங்க. நாங்க இந்த வீட்டை விலைக்கு வாங்கி விடுகிறோம்' என்றார் மூப்பனார்.

'அதுதான் நல்ல யோசனை' என்றார் குன்றக்குடி தங்கவேலன்.

'**அப்படி எதுவும் செய்து வைக்காதீங்க. ஊரிலே கெட்ட பேருதான் வரும்; நீங்க சும்மா இருந்தா போதும்**' என்றார் காமராஜர். இருவரும் அமைதியாக வெளியே வந்தார்கள். காமராஜரின் மனதில் எவ்வளவு உறுதி இருந்தது என்பதுடன், எந்த நிலையிலும் தனக்கென ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள அவர் தயார் இல்லை என்பது தெரிகிறதல்லவா.*

3000 நாட்கள் சிறைவாசம்

பொது வாழ்வில் ஈடுபட்ட காமராசர் 1930-இல் நடைபெற்ற இந்திய சுதந்திரப் போரின் அங்கமான உப்புச் சத்தியாக்கிரகப் போரில் கலந்து கொண்டு 2 ஆண்டுகள் பெல்லாரி சிறையில் வாடினார். 1932-இல் சட்ட மறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டு திருச்சி, வேலூர் சிறைகளில் ஓராண்டு

---

* மாலை முரசு 19.01.1976, ப.5.

இருந்தார். சென்னை சதி வழக்கு என்ற பெயரால் திருவில்லிபுத்தூர் வெடிகுண்டு வழக்கு விருதுநகர் போஸ்ட் ஆபீஸ் வெடிகுண்டு வழக்குகளில் இரண்டு வார சிறை தண்டனை பெற்று திருச்சி சிறையில் 1933-இல் இருந்தார்.

தனிநபர் சத்தியாக்கிரகப் போரில் 1940-இல் ஈடுபட்டு, 10 மாதங்களும், ஏழு நாட்களும் வேலூர் சிறையில் இருந்தார்.

1942-இல் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக கைது செய்யப்பட்டு 15 நாட்கள் வேலூர் ஜெயிலில் இருந்தார். தொடர்ந்து வெள்ளையனே வெளியேறு இயக்கப் போராட்டத்தில் பங்கேற்று 3 ஆண்டுகள் (1942 - 1945) அமராவதி மற்றும் வேலூர் சிறைகளில் அடைக்கப்பட்டு தன் வாழ்நாளில் ஏறத்தாழ 3000 நாட்கள் சிறையில் இருந்தவர் காமராசர்.

கிரிராஜ்

காமராஜர் குடியிருந்த திருமலைப்பிள்ளை எட்டாம் எண் இல்லம் கோவிந்தராஜுலுவின் மூத்த மகன் பி.ஜி. கிரிராஜ் பெயரில் இருந்தது. அவர் வட நாட்டுப் பெண்ணை திருமணம் செய்து அமெரிக்காவில் இருந்தார். கோவிந்தராஜுலு நாயுடுவுக்கு பி.ஜி.பிரபாகர், பி.ஜி.வெங்கட்ராமன் என்ற மேலும் இரண்டு பிள்ளைகள் உண்டு. பி.ஜி.கிரிராஜ் அமெரிக்காவில் இருந்ததால் வீட்டை விற்கும் உரிமையை (பவர்) பி.ஜி. பிரபாகருக்கு எழுதிக் கொடுத்து இருந்தார். அவர்தான் பணப் பிரச்சினைகளால் வட இந்தியரிடம் வீட்டை அடகு வைத்திருந்தார். அவர் வராததால் வீட்டை விலைக்கு வாங்கும் திட்டம் தள்ளிக் கொண்டே போனது.

விளக்கை அணைச்சிட்டுப்போ

1975 அக்டோபர் 2-இல் உதவியாளர் வைரவனிடம் **‘வைரவா! விளக்கை அணைச்சிட்டுப் போ’** என்று இறுதியாக சொல்லிவிட்டு படுக்கைக்குச் சென்ற பெருந்தலைவர் காமராசர் திரும்ப எழவேயில்லை.

ஒன்பது ஆண்டுகள் சிறைவாசம், ஒன்பது ஆண்டுகள் தமிழக முதலமைச்சர் 14 ஆண்டுகள் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர். ஐந்தாறு ஆண்டுகள் அகில இந்திய காங்கிரஸ் தலைவர். பலமுறை சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர் மூன்று முறை இந்தியப் பிரதமர்களைத் தேர்ந்தெடுத்தவர், தன் வாழ்நாளில் சொந்த வீடு இல்லாமலே வாழ்ந்துவிட்டு வழிகாட்டிவிட்டுச் சென்றார்.

கவியரசு கண்ணதாசன்

"சொத்து சுகம் நாடார்;
சொந்தந்தனை நாடார்;
பொன்னென்றும் நாடார்;
பொருள் நாடார்! தான்பிறந்த
அன்னையையும் நாடார்!
ஆசைதனை நாடார்!
நாடொன்றே நாடித்தன் நலமொன்றும் நாடாத
நாடாரை . . . நாடினேன் என்பார் கண்ணதாசன்"

ஒன்பது ஆண்டுகளாகத் தமிழகத்தில் முதலமைச்சராக இருந்து, காங்கிரஸ் அறக்கட்டளைக்கு கோடிக்கணக்கான சொத்துக்களைச் சேர்த்துப் பத்திரப்படுத்திச் சென்ற உத்தமத் தலைவர் கடைசிக்காலம் வரை மாதம் ரூ.250 வாடகை கொடுத்து சென்னையில் திருமலைப்பிள்ளை தெருவில் எட்டாம் எண் வீட்டில் வாழ்ந்தார் என்பது இன்றைய தலைமுறையினருக்கு கதையாகத்தான் நினைக்கத் தோன்றும். வருங்காலத் தலைமுறை இது அப்பட்டமான பொய் என்றும் சொல்லக்கூடும் என்பதால், வாடகை வீட்டில் வாழ்ந்த வரலாற்று நாயகர் காமராசர் சரிதத்தை விரிவாகவே இளைய தலைமுறையினருக்காகத் தந்துள்ளேன்.

மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் காமராஜர் வாழ்ந்த இந்த வீட்டை அரசு மூன்று இலட்சத்தி ஏழாயிரத்தி தொள்ளாயிரத்தி முப்பத்தி இரண்டு ரூபாய் 55 காசு என்று

(307932.55) மதிப்பீடு செய்து அந்த விலைக்கு எடுத்துக் கொள்வதாக அரசு கூறியது. ஆனால் கிரிராஜ், பிரபாகர் சகோதரர்கள் இந்த மதிப்பீட்டை ஏற்காமல், அன்றைய மார்க்கெட் மதிப்பின்படி தொகை கேட்டனர்.

இந்தப் பிரச்சனையால் பல ஆண்டுகளாக வாடகையும் கூட அவர்கள் வாங்கவில்லை. ஆனால் அடமானம் பெற்றவரிடம் அவர் பெற்ற தொகையை அரசாங்கமே செலுத்திவிட்டு, வீட்டுப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு, 15.07.1978-இல் காமராஜர் வாழ்ந்த வீட்டை அரசுடைமையாக்கி, நினைவு இல்லமாக மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர். மாற்றினார். காமராஜர் பயன்படுத்திய பொருட்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கூறும் புகைப்படங்கள், படித்த நூல்கள் ஆகியவை நினைவு இல்லத்தில் நிரந்தரமாக வைக்கப்பட்டுள்ளன.

வீட்டின் உரிமையாளர்களான கிரிராஜ் சகோதரர்கள் தொடர்ந்து வந்த அரசிடம் விண்ணப்பித்து அடமானத் தொகை நீங்கலாக வீட்டுக்கான மார்க்கெட் மதிப்பு விலையைப் பெற முயற்சிப்பதாகத் தெரிகிறது.*

காமராஜர் மறைந்த போது நூறு ரூபாய்தான் சட்டைப் பையிலும், 125 ரூபாய் வங்கிக் கணக்கிலும், 4 ஜோடி கதர் வேட்டி, கதர்ச் சட்டை, கதர்த் துண்டுகளும், ஒரு இணைகால் மிதியடிகளும், ஒரு கண்கண்ணாடி, ஒரு தடித்த எழுதுகோல் மற்றும் ஒருவருக்குரிய சமையல் பாத்திரங்களைத் தவிர வேறு பொருள் எதுவும் தனக்குச் சொந்தமாக வைத்திருக்கவில்லை.**

“ஒரு வீடும் சொந்தமென்று
வாங்கிய தில்லையடி இந்தத்
திருநாடே சொந்தமென்று

---

* தேவி, 21.08.2002, ப.28, வார இதழ், காமராஜர் வாழ்ந்த வீட்டின் கதை கட்டுரையில் . . .

** நெல்லை கதிரவன், நாளிதழுடன் இணைப்பாக வழங்கிய காமராஜர் நூற்றாண்டு விழா சிறப்பு மலர், 18.07.2002, ப. 24.

தாங்கிய மன்னனடி
மண்ணாசை, பொன்னாசை
எண்ணமும் இல்லையடி"

என்ற கவியரசு கண்ணதாசன் வரிகளுக்கேற்ப வாழ்ந்தவர் காமராசர்.

"மகனைப் பெற்று வளர்த்து இந்த
நாட்டுக்கு கொடுத்து விட்டேன்
அவன் (காமராஜ்) நீண்டகாலம்
இருந்து இந்த நாட்டுக்கு மேலும் மேலும்
சேவை செய்துக்கிட்டிருக்கணும் என்பது
தான் என் ஆசை. துறவியாகிவிட்ட
பட்டினத்தடிகளை, அவர் தாய் துறந்து
விட்டதைப் போல, நானும் என் மகனை
இந்த நாட்டுக் காகத்தந்து விட்டு நிற்கிறேன்"

என்று கண் கலங்கச் சொன்னார் அன்னை சிவகாமி அம்மையார்.*

தமிழகத்தின் தாய்மார்கள் இப்படிச் சொல்லும் அளவு இளையதலைமுறையினர் சுயநலமின்றி இத்தாய்த் திருநாட்டிற்காக உழைத்திட முன்வர வேண்டும். ஊழலற்ற சமுதாயம் அமைந்திடல் வேண்டும்.

* ஆனந்தவிகடன், 02.07.1961.

பிரார்த்தனை செய்ய வேண்டுகிறேன்

இரத்தப் புற்று நோயால்

எங்களைத் தவிக்க விட்டு

அண்மையில் (04.07.2011)

மறைந்த சகோதரி,

'அண்ணே' என்று வாய் குளிர என்னை அழைக்கும்

மகப்பத் என்ற மஹ்முதாள்

மறு உலக நல்வாழ்விற்காகப்

பிரார்த்தனை செய்ய வேண்டுகிறேன்.

செ.திவான்



சுகைனா பதிப்பகம்
106 F-4A, திருவனந்தபுரம் ரோடு
பாளையங்கோட்டை-627002
தொ.பே.எண்.0462-2572665